## DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 75 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : சித்ரா | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : Karuppasamy | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( A2 present, Others absent 317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் எ.கன்னியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா.1 எனது மாமியார் ஆவார். புகார்தாரான எனது கணவர் கருப்பசாமி இறந்து ஒரு வருடம் ஆகிறது. எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இருந்தே பிரச்சினை இருந்து வந்தது. நாங்கள் வழக்கு புகார் கொடுத்து 5 வருடங்கள் ஆகிறது. அன்றையதினம் காலை 10:00 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். எனது கணவர் கருப்பசாமி கிணற்றுமேட்டிற்கு சென்றிருந்தபோது எனது கணவரை எதிரி முத்துப்பாண்டி அடித்துள்ளார். எனது கணவர் காலை 10:00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டார். 1 முதல் 4 எதிரிகள் வீட்டிற்கு வந்து எதிரி பிச்சைபாண்டி உலக்கையால் எனது கணவரின் தலையில் அடித்துவிட்டார், அதில் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டது.

2. என்னை எதிரி பாண்டீஸ்வரி முடியை பிடித்து இழுத்து விளக்கமாற்றால் அடித்தார். எதிரி முத்துப்பாண்டி உலக்கையை அவரது அண்ணன் எதிரி பிச்சைபாண்டியிடம் இருந்து பிடுங்கி எனது மாமியாரை நெஞ்சில் அடித்துவிட்டார். எதிரி முனியம்மாள் எங்கள் எல்லோரையும் சேர்த்து விளக்கமாற்றால் அடித்தார். பக்கத்துவீட்டில் இருந்தவர்கள் சம்பவத்தை பார்த்து விலக்கிவிட்டார். எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். ஒருநாள் முழுவதும் எதிரிகள் அவர்களது வீட்டிற்கு

வரவே இல்லை. நான், சாட்சிகள் பொன்னழகு, பொன்ராம், எனது மாமியார் அசா.1, எனது கணவர் கருப்பசாமி ஆகியோர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அங்கிருந்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது கணவர் ஒருவார காலமாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். எனக்கும் எனது மாமியாருக்கும் ஊசி மட்டும் போட்டார்கள், என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து எனது கணவர் கருப்பாசாமியின் கையொப்பம் தான். **(அந்த புகார்மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** சம்பவம் நடந்த உடனே நாங்கள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றுவிட்டோம். எனது கணவர் தோட்டத்திற்கு நடந்த சம்பவத்திற்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சண்டை நடந்த சமயத்தில் எனது கணவர் ஒட்டன்சத்திரத்தில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எதிரி பாண்டீஸ்வரியை எனது கணவர் வீட்டிற்குள் சென்று கையை பிடித்து இழுத்து தகாத முறையில் நடந்து கொண்டது சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து வைத்து எங்களுக்கு அது சம்பந்தமாக விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான், ஆனால் எனது கணவர் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. அந்த பிரச்சினை சம்பந்தமாக ஊர் உறவின்முறை எனது கணவரை ஊருக்குள் வரவேண்டாம் என்று சொல்லி வெளியூரில் இருக்க சொன்னார்கள் என்றால் சரிதான். எனது கணவர் புகார் கொடுத்த பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் கொடுத்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்கள், அதற்கு பின்பு விசாரிக்கவில்லை.

4. எதிரி முத்துபாண்டி எனது கணவரை உலக்கையால் அடித்ததாக சொன்னேனா என்றால் எதிரி பிச்சைபாண்டி தான் என் கணவரை அடித்தார் என்று சொன்னேன். எதிரி முத்துபாண்டி எனது மாமியாரை அடித்ததாக சொன்னேன். எதிரி பழனியம்மாள் விளக்கமாறால் எங்கள் நான்குபேரையும் அடித்ததாக போலீசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். எனது கணவருடன் சென்று புகார் கொடுத்தபோது நானும் அந்த புகாரில் கையெழுத்து செய்தேனா என்றால் நான் கையெழுத்து செய்தேன். எனக்கு ஏற்பட்ட காயம் சம்பந்தமாக மருத்துவமனையில் ஊசி போட்டுக்கொண்டேன், உள்நோயாளியாக சிகிச்சை எடுக்கவில்லை. எனது மாமியாரும் ஊசி போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார்.

நான் சொல்வது போல் எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவில்லை என்றும் நானும் எனது கணவரும் மாமியாரும் சேர்ந்து என் கணவரை ஊருக்குள் விடாததால் நாங்கள் தான் எதிரிகளை தாக்கி காயப்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரை ஊருக்குள் விடாததால் என் கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் மற்றும் மாமியாருக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்படவில்லை, கீழே விழுந்ததால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன முறையில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

S.d./ Chithra

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.